**Registered Post with A/D** 01.02.2018

**From**
S. Peter Raj M.A(His), M.A(Eco), M.A(Eng), M.A(Psy), M.A(Soc), M.A(Pol), M.A(Pub.Admin), M.A(GT), M.A(Ind.Cul), M.Ed, B.G.L.,
AVE MARIA, 9, Rice Shop Street, SATANKULAM– 628 704, Thoothukudi District
(Email: sssavemaria@gmail.com) Mobile: 94425 29442

RT636300459IN IVR:8284636300459
RL SATANKULAM S.O <628704>
Counter No:1,01/02/2018,11:14
To:ST VALAN GIRL,PUB INFORM OFFIC
PIN:628704, Satankulam S.O
From:S PETER RAJ,9 RICE SHOP STRE
Wt:20gms
Amt:25.00(Cash)

India Post

**To**
பொதுத் தகவல் அலுவலர்,
தூய வளன் பெண்கள் தொடக்கப்பள்ளி,
சாத்தான்குளம்.

அம்மா,

**பொருள்:** தகவலறியும் சட்டம் 2005ன்கீழ் தகவல் வேண்டுதல் – சார்பாக

1. தங்கள் பள்ளியை நடத்தும் கல்வி முகமையின் பதிவு பெற்ற சரியான பெயரினை தகவலாகத் தருக. தங்கள் பள்ளிக் கட்டிடம், நிலம், தோட்டத்திற்கான நிலம், விளையாட்டிடம் ஆகியவை கல்வி முகமையின் பெயரிலோ பள்ளியின் பெயரிலோ பதிவு செய்யப்பட்டிருந்தால் அதன் நகல்களை அனுப்பிடுக.

2. தங்கள் பள்ளியை நடத்தும் கல்வி முகமையின் பதிவு பெற்ற பெயரிலோ அல்லது தங்கள் பள்ளியின் பெயரிலோ சிறுபான்மை உரிமை பெற்றிருந்தால் அதன் நகல் அனுப்பிடுக.

3. தங்கள் பள்ளியின் தற்போதய தாளாளரின் நியமன ஆணை நகலினை தகவலாக தருக. அன்னாருடைய நியமனத்திற்கு கல்வித்துறை அளித்துள்ள அளித்துள்ள ஒப்புதல் ஆணையின் நகலினை தகவலாக தருக.

4. தங்கள் பள்ளி நிர்வாகத்தின் கண்காணிப்பாளர் பெயரினை தகவலாக தருக. அன்னார் தங்களது பள்ளிக்கு கண்காணிப்பாளராக நியமனம் பெற்றதற்கான ஆதாரத்தினை தகவலாக தருக.

5. தற்போதய தலைமை ஆசிரியர் இப்பள்ளியில் பணியேற்குமுன் எந்த நிர்வாகத்தில் எந்த மாவட்டத்தில் எந்த பள்ளியில் எந்த பதவியில் பணியாற்றினார் என்ற விவரத்தை தகவலாக தருக. இப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியேற்றமைக்கு கல்வி இலாகா வழங்கிய ஒப்புதல் நகலினை தகவலாக அனுப்பி உதவிடுக.

தகவல் பெற ரூபாய் 10 மதிப்புள்ள நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன். மேற்கொண்டு பணம் செலுத்தவும் தயாராக உள்ளேன் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி,

இப்படிக்கு,







01/02/18

பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன் 01.03.2018

அனுப்புனர்

2/3/18

பொதுத்தகவல் அலுவலர்,

தூய வளன் பெண்கள் தொடக்கப்பள்ளி,

சாத்தான்குளம் - 628704,

பெறுநர்

எஸ். பீட்டர் ராஜ்,

9, அரிசி கடை தெரு,

சாத்தான்குளம் - 628704.

ஐயா,

பொருள்: தகவலறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் தகவல்கள் வழங்குதல் - சார்பாக.

பார்வை: 1. தங்களது விண்ணப்பம் நாள் 01.02.2018.

பார்வையில் கண்ட தங்களது விண்ணப்பத்திற்கு கீழ்கண்டவாறு தகவல்கள் வழங்கப்படுகிறது:

இனம் 1: இப்பள்ளியானது 'தூத்துக்குடி டயோசிசன் அசோசியேஷன்' என்ற பெயரில் சங்க பதிவு செய்யப்பட்டு, 'த ரோமன் கத்தோலிக்க டயோசிஸ் ஆப் தூத்துக்குடி' என்ற அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது.

பள்ளியின் நிலம் சம்பந்தப்பட்ட தகவல்கள் கோரப்பட்டுள்ளது. இதில் எந்த ஒரு பொது நலனும் இல்லாததால் இது குறித்த தகவல்கள் வழங்குவதற்கு இல்லை என தெரிவிக்கப்படுகிறது. இதே நிர்வாகத்திற்குட்பட்ட சாத்தான்குளம் புனித ஜோசப் பெண்கள் மேனிலைப்பள்ளிக்கு தாங்கள் இத்தகவலை கேட்டபோது தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண் SA7857/டி/2015 நாள் 13.07.2016 ன் ஆணையில் இந்நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இனம் 2: இவ்வலுவலக கோப்புகள் குறித்த தகவல் அல்ல.

..............2

Scanned by CamScanner

இனம் 3: பொதுநலன் சார்ந்த தகவல் அல்ல.

இனம் 4: பள்ளி நிர்வாகத்தின் கண்காணிப்பாளர் அவர்களின் பெயர்: அருட்தந்தை. டொமினிக் அருள்வளன். அன்னார் நியமனம் செய்யப்பட்டதற்கான ஆதாரம் பள்ளியின் அலுவலக கோப்புகளில் இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

இனம் 5: தனிநபர் உரிமை சார்ந்தது என்பதால் தகவல் வழங்குவதற்கு இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

சாத்தான்குளம்

01.03.2018

சகோ. சி. மெர்சி ராணி

தலைமை ஆசிரியை

புனித ஜோசப் பெண்கள் தொடக்கப் பள்ளி,

சாத்தான்குளம்,

தூத்துக்குடிமாவட்டம்.

Scanned by CamScanner